செப் -19..

ஆர்யதர்மம்.

புத். 3.
ஸஞ். 5.

பிங்களவஃ பாத்திரபத சுத்தபஞ்சமி.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
DEC 1917
MADRAS

"ஈசுவரன்"

சராசரவடிவமான சகல பிராணிவர்க்கத்தையும் படைத்து காத்தருளும் ஈசுவரன் ஒருவர் ஸ்வயஞ் சோதிச் சுடராய் பிரகாசிக்கின்றாரென்பது கற்றுணர்ந்த கல்விமான்களுக்குச் சுருதிவாயிலாய் வாய்ந்த ஸ்வானுபவசித்தம். ஆயினும் சிலர்—ஈசுவரனென்றொருவர் உண்டோவெனச் சங்கையடைகின்றனர். அவர் கருத்தாவது, ஒருவஸ்து உளதாகில் கண், காது முதலிய இந்திரியங்களால் அறியக்கூடியதாயிருக்கும். கண், காது முதலிய இந்திரியங்களாலறியப் படாத

தாயின் அதனையில்லையென்றே கொள்ளவேண்டும். அங்ஙனமாகவே ஈசுவரனென்பவரும் இந்திரியங்களுக்குப் புலப்படாமையாலவரை யிருப்பவராக எங்ஙனம் நம்புவது? அவரிருப்பவரானல் இந்திரியங்களாலறியப்பட்டிருப்பாரே? அறியப்படாமையால் அவ்ரில்லையென்றே கொள்ளவேண்டுமென்று இங்ஙனம் சங்கிப்பவரையிது கேழ்ப்பாம். இந்திரியங்களாலறியப்படாமை பற்றியே ஒரு வஸ்துவை இல்லையென்றே சாதித்துவிடலாமா? இந்திரியங்களாலறியப்படாவிடினும் அனுமானம் முதலிய பிரமாணங்களால் அந்த வஸ்துவை ஸாதிக்கின்றோமல்லவா? இந்திரியங்கள்யாவும் அதிந்திரியங்களே (இந்திரியங்களாலறியப்படாதவை). ஆயினுமவைகளையில்லையென்று கொள்வதில்லை. அனுமானம் முதலிய பிரமாணங்களால் அவைகளை உண்டென்றே நம்புகிறோம். அதுபோல ஈசுவரனுமிந்திரியங்களுக்குப் புலப்படாவிடினும் அனுமானம், முதலியவைகளாலறியப்படுவார்.

'अतीन्द्रियार्थविज्ञाने मानं नः श्रुतिरेव हि'

'அதீந்திரியமான பொருள்களைத் தெரிந்துகொள்வதற்குச் சுருதிதான் பிரமாணம்' என்பதாதி வாக்கியங்களால் சுருதி ஸ்மிருதி முதலிய பிரமாணங்களைக் கொண்டல்லவா ஆன்றோர் ஈசுவரனை ஸாதிக்கின்றனர். அங்ஙனமிருக்க, அவரை ஸாதிப்பதற்கு அனுமானத்தையும் பிரமாணமாகவெடுத்தது என்னகாரணத்தினலென்றால் கூறுவாம். யுக்திக் கொவ்வும்படி கூறாவிடில் அந்த சுருதி ஸ்மிருதி முதலியவைகளைச் சிலர் அர்த்தவாதமென்றும் தோன்றக்கூடிய பொருளில் அந்த வாக்கியத்திற்கு தாத்பரியமில்லையென்றும் சங்கிப்பார். அதனை நிவர்த்திப்பதற்காக சுருதி ஸ்மிருதிகளில் கூறப்பட்ட ஈசுவர சொருபத்தில் அனுமானத்தையும் பிரமாணமாகக் காட்டினல்

சுருதியின் கருத்து திடப்படும் என்ற அபிப்பிராயத்தாலாமென்க. அந்த அனுமானமாவது—உலகத்தில் மிகவும் அற்புதமாயமைக்கப்பட்ட விசித்திரமான மாளிகை கோபுரம் முதலியவைகள் மஹா புத்திமானாகிய சிற்பிகளாற்றான் கட்டப்பட்டதாகக் காணப்படுவதுபோலவே இந்த ஜகத்தும் அத்யற்புதமாயமைக்கப்பட்ட விசித்திர காரியமானதால் இதில் (ஜகத்தில்) வஸிக்கும் பிராணிகள் அவரவர்கள் வஸிக்குமிடம், அவர்கள் செய்த தொழில் அதற்குறிய பயன் இவைகளையெல்லாம் நன்கு அறிந்த ஸர்வக்ஞனான ஒருவனால் செய்யப்பட்டதாயிருக்கவேண்டும். அவர்தான் ஈசுவரனெனப்படுவார். ஜகத்து விசித்திர காரியமெனக் கூறப்பட்டதே. அதன் விசித்திரதன்மை யாங்ஙனமெனின் கூறுவாம்—தேசத்திற்கும், காலத்திற்கும், நிமித்தத்திற்குமேற்றவாறு கண்டிப்பாய் பிரவிருத்தி (தொழிற்செய்தல்) நிவர்த்தி (தொழிலை நிறுத்தல்) யுள்ளவர்களும், பிரவிருத்தி நிவர்த்திகளுக்கு விஷயமான நல்வினை தீவினைகளின் பயனாகிய இன்ப துன்பங்களை யனுபவிக்கின்றவர்களும், அதில் பெரும்பாலும் இன்பத்தையே சுவர்க்காதி லோகங்களில் அனுபவிக்கின்ற, தேவர் கந்தருவர், யக்ஷர், பிதிருக்கள் முதலியவர்களும், பெரும்பாலும் துன்பத்தையே நரகாதிலோகங்களில் அனுபவிக்கின்ற, பிரேதம் பிசாசம் முதலியவர்களும், இன்ப துன்பங்களை மாறி மாறி சமமாய் மனுஷ்யாதி லோகங்களில் அனுபவிக்கின்ற மனிதர் முதலியவர்களும் ஆகிய அனேக பிராணிகளுள்ளதாகவும், இவ்வளவு பிராணிகளும் வஸிப்பதற்காக ஸுவர்க்கம், அந்தரிக்ஷம், பூமி, சூரியமண்டலம், சந்திரமண்டலம், குஜன் முதலிய கிரகமண்டலம், நக்ஷத்திரங்கள் முதலிய அனேக லோகங்களுள்ளதாகவும், ஆறு மலை, காடு, நாடு முதலிய பற்பல விசேஷங்களமைந்ததாக

வும் இந்த ஜகத்து இங்ஙனம் விசித்திரமாய்க் காணப்படு கின்றது. இத்தகைய ஜகத்தை, நம்போலிய ஜீவராசிக ளுள் யாரேனுமொருவன் மனதினாலாவது சிந்திக்கச் சக்திவாய்ந்தவனாக இருக்கலாமென்று நினைக்கவுமிடமில்லை. தனக்கு வாய்ந்த சரீரத்தையே தன்னுடைய இச்சைக் கிசைந்தபடி நடத்திக்கொள்ள சக்தி ஒருவருக்குமில்லை யென்பது யாவருக்கும் வெளிப்படை. பிரத்தியக்ஷமாக இது துன்பத்தைத்தான் விளைவிக்குமென்று தெரிந்து கொண்ட விஷயத்தினின்று தன் கருவிகளை விலக்க முடியாமல் பின்னிட்டுப் பரிதபிக்கும் பலரைப் பார்க்கின் றோம். அங்ஙனமிருக்க ஜீவராசிகளுக்கு இந்த ஜகத்தைப் படைக்கவாவது அடக்கி ஆளவாவது ஓர் விதமாக ஒடுக்கவாவது சக்தியில்லையென்பதற்கையமில்லை. இனி—இப் பிரபஞ்சம் விசித்திரமாயிருக்கட்டும். ஸர்வக்ஞனாகிய ஒருவனுடைய பிரயத்தினத்தாற்றான் அமைக்கப்பட்டிருந் தவேண்டுமென்று ஏன் ஒப்புக்கொள்ளவேண்டும். அந் தந்தப் பிராணிகள் செய்யும் கர்மங்கள் விசித்திரமாயிருப் பதால் பிரபஞ்சமும் விசித்திரமாயிருக்கின்றது. பிராணிகளும் பற்பல பயன்களை யனுபவிக்கின்றார்கள். அதற் குரிய சாதனங்களும் வேறுபாட்டை யுடைந்திருக்கின் றன என்று ஒப்புக்கொண்டால் என்ன கெடுதி. ஈசுவர னைக் காரணமென்று வாதிப்பவர்களும் ஜகத்தின் விசித் திரத்தன்மையில் கர்மங்களையும் காரணமாக ஒப்புக் கொள்ளாமல் முடியாது. அதெப்படியெனில் கூறுவாம்-- "ஈசுவரன் ஒருவனை சுகியாகவும் ஒருவனை துக்கியாகவும் படைப்பானே. அடியோடு ஜகத்தை ஸம்ஹரிக்கின்ற மையால் கொஞ்சமேனும் தயையில்லாதவர் என்றல்லவா ஏற்படுகின்றது" என்று ஈசுவரவாதிகளைக் கேட்டால் அவர்கள் கர்மவைசித்திரியத்தாலென்று கூறாமல் என்ன

சொல்லப்போகிறார்கள். ஆகையால் ஈசுவரவாதிகளும் ஜக த்தின் விசித்திரத்தன்மைக்கு ஹேதுவாக கர்மத்தையே ஒப்புக்கொண்டுவிடலாம். ஈசுவரனென்ற தர்ம்மியொருவர். அவருக்கு இன்ப துன்பங்களாகிய பயனைக்குறித்து கார ணத்தன்மையென்றதர்மம் இவ்விரண்டையும் அதிகமாகக் கற்பிப்பதைவிட இன்றியமையாத கர்மத்தின்கண்ணே பய னைக்குறித்து காரணமாந்தன்மை யென்ற தர்மத்தை அங் கீகரிப்பது எளிதாகும். கர்மங்களுக்கு இவ்வளவு சக்தி யுண்டோவெனச் சங்கை செய்ய இடமில்லை. கர்மங்க ளின் மகிமை பலவாறாகச் சுருதிகளில் கூறப்படுகின்றது. யாவராலுமங்கீகரிக்கப்பட்டது. ஆகையால் பிரபஞ்சத் தின் விசித்திரத் தன்மைக்குக் கர்ம்மமே காரணமாகும் என்ற ஆசங்கை நிகழும். இதற்கு சமாதானம் பின் வருமாறு—கர்மமானது பிரபஞ்சத்தின் விசித்திரத்தன் மைக்கு ஹேது என்பது பொருந்தாது. ஏனெனில் காரண வஸ்து ஸ்வதந்திரமாக இருக்கவேண்டும். மற் றொன்றை யாசிரயித்ததாயிருக்கக்கூடாது. ஒன்றை ஆசி ரயித்ததாகவே யிருக்குமானால் அந்த வஸ்துவுக்கு கார ணத் தன்மை சித்திக்காது. கர்மத்தைக் காரணமாகக் கொண்டோமாயின் அதனை ஸ்வதந்திரமாக ஒப்புக்கொள் ளவேண்டும். அங்ஙனமெவருமொப்புக் கொள்ளவில்லை. கர்மமானது கர்த்தாவை யாசிரயித்து இருப்பதாகத்தான் யாவருமங்கீகரிக்கின்றனர். சேதனனாகிய கர்த்தாவின் பிர யத்தினத்தாலல்லவா கர்மமேற்படுகின்றது. கர்த்தாவின் வியாபாரமில்லையானால் கர்மமுமில்லை. ஆகையால் கர்த்தா வின் பிரயத்தினத்தாலேற்பட்டு கர்த்தாவையே யாசிரயி த்திருக்கின்ற கர்மம், தன்னை பிரேரணைசெய்யும் வேறொரு வஸ்துவை யபேக்ஷிக்காமல், தேசாந்திரத்திலோ காலாந் திரத்திலோ குறிப்பிட்ட நிமித்தங்களை யபேக்ஷித்து வரும்

பயனுக்குக் காரணமாக ஆகாது. தன்னை பிரேரணை செய்யுமொரு வஸ்துவை யபேக்ஷிக்காமல் கர்மம் பயனுக் கேதுவாக ஆகாததானால் ஜீவனே அதற்குப் பிரேரணை செய்பவனாகயிருக்கட்டுமேயென வாசங்கை சரியன்று. ஜீவன் தேசகாலநிமித்த விசேஷங்களை யறியாதவனாகை யால் ஸ்வதந்திரனாகவிருந்து அதை யேவ சக்தியாய்ந் தவனில்லை. தேசகால நிமித்த விசேஷாதிகளையறிந்து ஸ்வதந்திரனாகவே ஏவுகின்றானென்றால் தனக்குப் பய னைத்தரும்படி கர்மங்களை பிரேரணை செய்யும் ஜீவன் இன்பத்தையே விளைவிக்கும்படி ஏவுவானேயல்லாது துன் பங்களை விளைவிக்கும்படி ஏவமாட்டான். சுவதந்திரனா யுள்ளவன் தனக்குத் துன்பத்தைத் தானாகவே செய்வித் துக் கொள்வானா? கெடுதி யென்று தெரிந்து கொண்டே பிரவிருத்திக்கின்ற பலரைப் பார்க்கிறோம். அங்ஙனம் பிர விருத்திப்பது சுதந்திரனாகவிருந்தால் பொருந்தாது.

अथ केन प्रयुक्तोऽयं पापं चरति पूरुषः ।
अनिच्छन्नपि वार्ष्णेय बलादिव नियोजितः ॥

என்ற சுலோகத்தில் இக்கருத்து வெளிப்படுகின்றது. ஆகையால் கர்மமானது ஜீவனால் பிரேரிக்சப்பட்டு பயனுக் கேதுவாகின்றது என்பது சரியல்ல. ஜீவனுடைய இச் சையில்லாமலே ஓர் நிமித்தமுமின்றி தானாகவே தோல் தொஞ்சு சுறுங்கி விகாரப்படுவதுபோல கர்மமும் தானாக வே இன்ப துன்பங்களை விளைக்கின்றதென்பதும் கூடாது. திருஷ்டாந்தமாகக் கொடுத்த தோல் தானாகவே விகாரப் படுவதாயிருந்தால் அதுபோல கர்மமுமெனலாம். அங் ஙனமில்லையே? தோல் விகாரப்படுவதும் வியாதி முதலிய காரணத்தை முன்னிட்டே சம்பவிக்கின்றது. நிஷ்காரண மாயேர்ப்படுவதில்லை. அதுபோல கர்மமும் தானாக பய னை விளைவிக்காது. இங்கு பௌத்தர்களின் ஓர் ஆசங்

கையுண்டு. அதாவது—கர்மமானது கர்த்தாவால் செய்யப்படினும் கர்த்தாவை யாசிரயித்திருப்பதில்லை. கர்த்தாவென்று சொல்லப்படும் ஆன்மா, க்ஷணிகவிக்ஞான ஸ்வரூபனாக பௌத்தர்களாலங்கீகரிக்கப்பட்டவனாகையால் கர்மங்களை பயனைத் தருமளவும் நீடித்திருக்கமாட்டான். ஆகையால் கர்மம் கர்த்தாவை யாசிரயித்திராது. ஆனால் கர்த்தாவால் செய்யப்பட்டு ஏதோ ஒரு காலத்தில் பயனை பிழுத்துவிடுகிறது. அயஸ்காந்தமணி சேதனனால் ஒரு காலத்தில் பிரேரிக்கப்பட்டுள்ளது இரும்பை யாங்ஙன மிழ்க்கின்றதோ ஆஙஙனமே இதையும கண்டு கொள்க என்று. இவ்வாசஙகை சரியல்ல. கருவிகளை பிரேரணை செய்பவன கர்த்தாவெனப்படுவான். கர்மமவனைத் தானு சிரயித்திருக்கும். இது யாவருக்கும் பிரஸித்தம். பயனைத் தருமளவும் கர்த்தா நீடித்திருக்கமாட்டானேயென்றால் அப்படி யான்மாவை க்ஷணிகனாக ஒப்புக் கொள்ளக் கூடாது. அப்படி ஒப்புக் கொள்ளுவதே பௌத்தமதத்திற் பெரிய தோஷம். க்ஷணிகனாக ஒப்புக்கொண்டால் கர்மத்தைச் செய்தவனொருவன் அதன் பயனைப் புசிப்பவன் மற்றொருவனென்பதாதி தோஷங்களும் பௌத்த மதத்தில் நிகழும். ஆகையால் அந்த மதகொள்கை சரியல்ல. இங்கு ஆன்மா ஸ்திரனாயுள்ளவனென்ற விஷயத்தைப் பற்றி "ஆன்மா" என்ற பிரஸங்கத்தில் விரிவாய் வருமாதலாலதனை யிங்குவிடுத்தனம். இஙகு நாஸ்திகரின் சஙகையிது—தேகவடிவமாய்ப் பரிணமித்த பிருதிவீ முதலிய பூதஙகளைத்தவிர வேறாக ஆன்மாவெனபவனொருவனில்லை. பூதங்களே சேதனனாகிய ஆன்மாவாம். கர்மங்களும் அந்த பிருதிவீ முதலிய பூதங்களின் பரிணாமமாகிய சரீரத்தின கணமனை பற்றி நிற்கின்றது என்று. அதுவும சாயன்று—சரீரவடிவமான பூதமே ஆனமாவென்பது பொ

ருந்தாது. இதுவும் "ஆன்மா" என்ற பிரஸங்கத்தில் விரிவாய் வரும். சரீரத்தைத் தவிர அன்னியனாகவே ஆன்மாவையங்கீகரிக்க வேண்டும். ஆகவே அவனால் செய்யப்படும் கர்மங்களுக்கு ஸாதனமாக் அமைந்துள்ள பூதங்கள் எங்ஙனமாசிரயமாயிருக்கும். கர்த்தாவினுடைய கர்மகாலத்தில் பூதங்கள் வியாபாரமுள்ளவைகளாகின்றன. கர்மம் முடிந்தபின்னர் கர்த்தாவினால்விடப்பட்டு வியாபாரமின்றி கிடக்கின்றன. உதாரணமாக—உழுது பயிரிடுந் தொழிலையுடையவனுக்கு அத்தொழிலுக்கு சாதனமாகிய கலப்பை முதலியவைகள் வேலை செய்யும் பொழுது வியாபாரமுள்ளவைகளாகவும், வேலை முடிந்தபின அவனால் விடப்பட்டு வியாபாரமின்றியுங் கிடக்கின்றன. ஆகவே அந்தக் கலப்பையாவது, கலப்பையின் வியாபாரமாவது காலாந்தரத்தில் வரும் நெல் முதலிய பலன்களை வீட்டிற்குக் கொண்டுவந்து சேர்கின்றதில்லை யல்லவா? அது போல கர்த்தாவாகிய ஜீவனுக்கு கர்ம காலத்தில் சாதனமாயுள்ள பூதங்களாவது அந்த பூதங்களின் வியாபாரமாவது காலாந்தரத்தில்வரும் பயனுக்குக் காரணமாக ஆகமாட்டாது. அன்றியும் அந்த பூதங்களும், அவைகளின் வியாபாரங்களும் அசேதனங்க (ஜடங்க) ளானபடியால் சுதந்திரமாக பிரவிருத்தியுள்ளவைகளாகாது. 'வாயு ஜடமாயினும் சுதந்திரமாகப் பிரவிருத்தின்றதே, என்பது சரியல்ல. வாயுவும் தானாகவே பிரவிருத்திக்கவில்லை. ஜடமாயுள்ளது தானாகவே பிரவிருத்திக்குமாகில் ரதம், வண்டி முதலிய ஜடங்களும் குதிரை மாடு முதலிய சேனதப் பிராணியாலிழுக்கப்படாமலே ஓடலாமே. ஓடுகிறதில்லை. ஆகையால் ஜடத்திற்கு சுதந்தரமான பிரவிருத்தி கிடையாது. ஆகையால் வாயுவும் சேதனனாகிய அந்தர்யாமியால் பிரேரிக்கப்பட்டு சலிக்கின்றது. அதுபோற்றான்

கர்மத்திற்கும் பிரேரிப்பவன் சுதந்திரனாக இருக்கவேண்டும். “अतीन्द्रियार्थविज्ञाने मानं नः श्रुतिरेव हि” என்றும் “तस्माच्छास्त्रं प्रमाणं ते कार्याकार्यव्यवस्थितौ” என்னும் வசனத்தால் நமது இந்திரியங்களுக்குப் புலப்படாததைத் தெரிந்துகொள்ள சாஸ்திரந்தான் பிரமாணமென்று கூறப்படுவதால் அந்த சாஸ்திரத்தில் (வேதத்தில்) இன்ப துன்பங்களுக்குக் கர்மமே காரணமென்று கர்மகாண்ட வாக்கியங்களெல்லாம் கூறுகின்றமையால் கர்மத்தினாலேயே பயனுண்டாகின்றதாக ஒப்புக்கொள்ளவேண்டுமே தவிர, அது ஜடமாச்சுதே எப்படிப் பயனைத்தரும், என்பதாதி யுக்திவாதஞ் சொல்வது உசிதமன்று. ஈசுவரனால் பயனுண்டாகின்றதென்பது உலகபிரஸித்தமுமன்று. உலகத்தில் கிருஷி (உழுது பயிரிடுதல்) முதலிய கிரியைகளால் பயனுண்டாவதுதான் பிரசித்தம். ‘அந்த கிரியைகளுக்கு ஈசுவரன் ஸாதகமாயிருக்கிறார். அதனால் அவரை பயனைத் தருபவராகக் கற்பிக்கிறது என்பதும் சரியல்ல. அந்த வேலைகளுக்கு கலப்பை முதலியவை அபேக்ஷிக்கப்படுவதுபோல் ஈசுவரன் அபேக்ஷிக்கப்படுவதாக பிரசித்தியில்லை. கலப்பை முதலியவை இல்லாமையால் வேலை நின்று போச்சுது என்பதுபோல் ஈசுவரனில்லாமையால் வேலை நடக்கவில்லை, நின்று விட்டது என்று எவனாவது சொல்லுவானா! ‘அப்படி . யொருவன் சொல்லுகின்றானே’ என்றால் அப்பொழுது நாஸ்திகனுக்கு அந்த வேலை நடக்காமல் நின்றுவிட வேண்டியதாக நேரிடும். கலப்பை முதலியவைபோல ஈசனும் ஸாதகமாயிருப்பானாகில் ஈசுவரனை யொப்புக்கொள்ளாதவர்கள் அநேகர் இருக்கின்றனர். அவர்களுக்கெல்லாம் தொழில் நடக்காமலேயல்லவா போய்விட வேண்டும். அங்ஙனமில்லாதபடியால் ஈசுவரன் காரணமில்லை. வேதப் பிராமாண்யத்தால் கர்மமே பயனுக்குச்

சுதந்தர காரணமெனக்கொள்ளவேண்டும். இங்கோர் சங்கையுண்டு. கர்மம் க்ஷணத்தில் அழிந்துவிடுமாகையால் காலாந்தரத்தில் வரும் பயனுக்கு எப்படி காரணமாகும் என்று. அற்றன்று. மருந்து ஸேவித்தல் முதலிய கிரியைகள் உடனே அழியக்கூடியவைகளாகினும் நீடித்து நிற்கக்கூடிய அதன் ஸம்ஸ்காரம் காலாந்தரத்தில் வரும் ஆரோக்கியம் முதலிய பயனுக்குக் காரணமாவதுபோல கர்மமும் உடனே அழியக் கூடியதாயினும், அப்பிராமாண்யம் முதலிய சங்கைக்கிடமில்லாத தோஷமற்ற வேதப் பிரமாணத்தால் பயனுக்குக் காரணமாகக் கூறப்பட்டதை ஸாதிப்பதற்காக அதிருஷ்டமென்று சொல்லக்கூடிய அபூர்வமெனப்படும். கர்மத்தின் ஸம்ஸ்காரமே காலாந்தரத்தில் வரக்கூடிய இன்ப துன்பங்களுக்குக்காரணமாகின்றது. ஈசுவரனென்பதற்குப் பிரமாணமில்லை.

याथातथ्यतोऽर्थान्व्यदधाच्छाश्वतीभ्यः समाभ्यः ।

என்பதாதி சுருதிகளால் ஈசுவரன் பலதாதாவாகக் கூறப்படுகின்றாரேயென்றால் அதெல்லாம் அர்த்தவாத வாக்கியமெனவும் ஈசுவரனைப் போதிப்பதில் தாத்பரியமில்லை எனவும், பிரவிருத்தி நிவர்த்திகளை போதிக்கின்ற வாக்கியந்தான் பிரமாணமேயொழிய மற்றவையெல்லாம் தோன்றக்கூடிய பொருளில் தாத்பரியமில்லாதவையெனவும் கர்மமீமாம்ஸகர்களின் கொள்கை. ஆகையால் கர்மமே காரணம் என்பதாகக் கர்மவாதிகளின் ஆசங்கை.

(இன்னும் வரும்.)

V. S. வெங்கடராம சாஸ்திரி.

ஆர்யமத தர்மம்.

(முன்தொடர்ச்சி.)

4. ஷட் உபநிஷத்துக்கள் ஈசம் கேனம் முதலிய பத்துக்களும் மற்றும் சிலவைகளும், ஸ்மிருதிகளில் முக்கியமாய் பகவத்கீதையும், மோக்ஷதர்மம் விஷ்ணு புராணம் முதலிய மற்றபாகங்களும். இவைகளே வேதத்திலும் ஸ்மிருதியிலும் ஞானகாண்டமென்றும் சொல்லப்படுகிறது. இவ்வுபநிஷத்துக்களில் சிலவை மந்திரங்களாயும் சிலது பிராம்ஹணங்களாயும் இருக்கின்றன.

5. இவ்வுபநிஷத்துக்களேயும் ஸ்மிருதி பாகங்களேயும் மூலமாகக்கொண்டு ஏற்பட்ட வியாஸஸூத்திரங்களுக்கு மூன்று ஆசாரியர்களால் மூன்று அபிப்பிராயங்கள் ஏற்படுமாஞல் அம்மூன்று அபிப்பிராயங்களும் ஸூத்திரத்திற்கு மூலபூதமான உபநிஷத் ஸ்மிருதிகளின் அபிப்பிராயமாகவே இருக்கவேண்டும்.

6. இம்மூன்று விதமான அபிப்பிராயங்களே மூலமாகக்கொண்டே த்வைதம் விசிஷ்டாத்வைதம், அத்வைதம் என்று மூன்று மதங்கள் பிரஸித்திபெற்றது. இம்மூன்றிலும் ஜீவனுக்கும் ஈசுவரனுக்கும் உள்ள சம்பந்தத்தை தெரிவித்துக் கொடுப்பதுதான் முக்கியமான விஷயம்.

7. அதில் த்வைதம் என்றால் ஜீவசுசுவரர்களுக்கு எந்த ஸமயத்திலும் பேதமே வாஸ்தவமென்பது. விசிஷ்டாத்வைதம் என்றால் இளமையான சரீரமுள்ள மனிதன் யௌவன சரீரமுடைய காலத்தில் இளமைப் பருவத்திற்கும் யௌவன தசைக்கும் பேதமிருந்தாலும் அவ்விரண்டையுமுடைய மனிதன் ஒருவன் என்பதுபோல் சரீரஸ்தானமாகிய ஜீவ ஜட பிரபஞ்சங்களுக்கு பல அவஸ்தை

களிருப்பினும் அதை சரீரமாய் கொண்ட பரமாத்மா ஒருவரே ஜீவனுக்கும் பரமாத்மாவுக்கும் சரீரசரீரி பாவம் சம்பந்தம் என்பதும். அத்வைதமென்றால் ஜீவனுக்கு ஜீவ பாவமே கல்பிதமாகையால் கல்பிதமான ஜீவபாவம் தன து பரமார்த்த ரூபமான பிரம்ஹ ஞானத்தினால் நிவர்த்தித் த உடன் பரமார்த்த ரூபமாகவே இருப்பது என்றும் சுருக்கமான அபிப்பிராயம்.

8. இம்மூன்று விதமான சித்தாந்தங்களையும் அதி காரிகளின் புத்தி பேதத்துக்குத் தக்கபடி வெளியிடப்பட் டதாய் அங்கீகரிப்பது உசிதம். அந்த சித்தாந்தத்தை வெளியிடும் ஆசாரியர்கள் வேறு சித்தாந்தத்தை பலவாறு நிந்திப்பதும் தான் காட்டிய சித்தாந்தத்தில் பெருமை புத்தி உண்டாக்கவேண்டுமென்று யெண்ணிச் செய்ததே தவிற வேறு கருத்தல்ல. மற்றொன்றை நிந்தித்து ஒரு சித்தாந்தத்தை பெருமையாக தெறிவிப்பது நமது சுருதி, ஸ்மிருதி இதிஹாஸங்களிலேயே விசேஷமாய்க் காணப் படுகிறது. அதற்கு செய்யும் சமாதானத்தையே இம் மூன்று ஆசார்யர்களின் கிரந்தங்களில்கூட சொல்வது தான் ஸமரச பாவத்தையடைந்த புத்திமான்களுக்கு அழகு.

9. இம்மூன்று சித்தாந்தங்களில் முதன்மையாய் ஜனங்களுக்கு போதிக்கத்தக்கது த்வைதமே. ஜனங்களுக் கு ஸ்வபாவமாகவே தனது ஆத்மரூபத்தைப்பற்றி நான் ஈசுவரன் அல்லவென்றும் மனிதன் ப்ராம்ஹணன், சூத்தி ரன் என்னும் பலவிதமான ஜன்மங்களிலுண்டான வாஸ னபலத்தால் பேத புத்தியானது பலமாய் வேர் ஊன்றி யிருக்கிறது. இவ்வித புத்தியுடைய ஜனங்களுக்கு எவ்வ ளவு தடவை உண்மையான உள்ரூபம் பிரம்ஹம் என்று

உபதேசித்தாலும் இது உபயோகப்படமாட்டாது. உபதேசமென்பதே ஒரு மனிதனுக்குத் தெரிந்ததை மூலமாக வைத்துக்கொண்டு அதிலிருந்து தெரியாத விஷயத்தையும் தெரிவிப்பதுதான். ஆகையால் பேத புத்தியுடைய ஜனங்களுக்கு அந்த பேத புத்தியை பிடித்துக்கொண்டே ஈசுவரப்பிரஸாதம் உண்டாகக் கூடிய வழியை உபதேசிப்பதுதான் பயன்படும். இதுவே த்வைத சித்தாந்தத்தின் பொதுவான ஸாரமாய் எடுத்துக்கொள்ளலாம்.

10. இவ்விதமான சித்தாந்தத்தை அங்கீகரிக்கக் கூடிய நிலமையிலிருக்கிறவர்கள் அத்வைத மதப்படி முதல்படியான கர்மயோகத்திற்கு தகுந்தவர்களாய் குறிப்பிடப்படுவார்கள். கர்மாவினால்செய்யும் ஆராதனத்திற்கு பேதபுத்தியென்பது மூலமாதலால் அவ்வித பேதபுத்தியை வைத்துக்கொண்டே செய்யப்படும் கர்மா உபாஸ்தி முதலியவைகள் முதல்படியிலுள்ள அதிகாரிகளுக்கென்று நமது பூர்வாசாரியர்களின் தாத்பரியம்.

11. இரண்டாவதான விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தில் சரீரத்துக்கும் ஆத்மாவுக்கும் எவ்விதமான சம்பந்தமோ அதுபோல் ஜீவனுக்கும் ஈசுவரனுக்கும் ஸம்பந்தமென்று நமது வேதாந்தங்களின் கருத்தாக ஏற்படுகிறது. இந்த சித்தாந்தத்தை அனுசரித்து அநுபவிக்கும் தக்க நிலைமையில் பிரபுவுக்கும் சேவகனுக்கும் உள்ளதுபோல் ஜீவனுக்கும் ஈசுவரனுக்கும் பேதமென்று முன் த்வைத சித்தாந்தத்தில் உள்ள பேத புத்தியானது கொஞ்சம் விலகினதாகும். பிராணிகளுக்கு சரீரத்தில் தானென்ற புத்தியும் தன்னுடை என்ற புத்தியும் ஸ்வபாவமாயிருப்பது போல் ஒரு மாதிரி அபேதத்தையும் உள்ளடக்கிய சம்பந்தமானது இந்த சித்தாந்தத்தில் வெளியாகிறது. இந்த சித்தாந்தத்தை கைபற்றியவர்கள் கீழ் சொன்ன பலமான

பேத புத்தியுடையவர்களைக்காட்டிலும் மேல்பட்டவர்களே. இந்த விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தின் நிலைமையானது அத்வைத மதப்படி இரண்டாவது படியான உபாஸ்தி அதாவது பக்தி மார்க்கமாய் அங்கீகரிக்கப்படும். உபாஸ்தி என்பது தன் முயற்சியினால் மனஸுக்கு சாஸ்திரத்தில் சொல்லியபடி ஒரே விஷயமான பாவனையின் தன்மை. இதுதான் மானஸ கர்மாவென்று சொல்லப்படுகிறது. இந்த சித்தாந்தத்திலும் ஜீவ ரூபத்துக்கும் பரமாத்ம ரூபத்துக்கும் தோன்றுகிற பேத புத்தியானது நிராகரிக்கப்படவில்லை. ஆகையால் இதற்கும் மேல் மூன்றுவதான ஞான மார்க்கம் நமது வேதாந்தங்களால் வெளியிடப்பட்டிருக்கிறதென்று நமது அத்வைத மதாசாரியர்களான ப்ராசீனர்களின் கருத்து.

12. கீழ் சொன்ன மூன்று விதமான படிகள் சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறதால் அத்வைத சித்தாந்தத்தில் சாஸ்திரங்களும் மூன்று வகுப்பாய் பிறிக்கப்படும். இவைகளில் முதல் படியான கர்மயோகங்களை சொல்லுவது விசேஷமாய் கர்மகாண்டமென்றும் வேத பாகமே மற்ற உபாஸ்தி ஞானமென்றும் இரண்டு படிகளை வெளியிடுவது உபநிஷத்துக்கள். இவ்வுபநிஷத்துக்களில் சிலவைகள் மூன்றுவதான ஞான மார்க்கத்தையே விசேஷமாய் உபதேசிப்பதும் சிலவைகள் இரண்டையும் உபதேசிப்பதும் சில இடங்களில் மாத்திரம் கர்ம பாகத்தையும் உபதேசிப்பதுண்டு. இவ்விதமான உபநிஷத்துக்கள் பலவகைகளிருந்தும் அவைகளில் ஸாரமாய் பத்து உபநிஷத்துக்கள் பூர்வாசாரியர்களால் பாஷ்யம் செய்யப்பட்டவைகள். அவைகளிலும் உத்தமாதிகாரியான மேதாவிக்கு மிகவும் சுருக்கமாய் பிரணவத்தை ஆச்சிரயித்து உபாஸ்தியை துவாரமாகக் கொண்டு தத்துவத்தை வெளி

யிடுவதாகவும் சுருக்கமாயுள்ள மாண்டூக்யமென்னும் உபநிஷத்து முதன்மையாய் கணக்கிடப்பட்டது. தக்க அதிகாரிகளுக்கு இது ஒன்றே போதுமானது. ஒரே சித்தாந்தத்தையே வெளியிட பல உபநிஷத்துக்கள் பல விதங்களாய் ஏற்பட்டதற்குக் காரணம் அதிகாரிகளின் புத்தி பரிபாகத்தின் தாரதம்யத்தை அனுசரித்துதான். இவ்விதமான உபநிஷத்துக்கள் அத்வைத சித்தாந்தத்தில் ஒரு பிரஸ்தானமாய் கணக்கிடப்படும். அதாவது உபநிஷத்து பிரஸ்தானம்.

13. இவ்விதமான உபநிஷத்துக்களில் சொல்லிய உத்தம, மத்தியமரூபமான ஞான உபாஸ்திமார்க்கங்களை இன்னும் லகுவாய்ம் தெளிவாயும் அறிவிக்கவேண்டியதற்காக நமது மகரிஷிகளால் ஸ்மிருதிகள் எழுதப்பட்டன. ஸ்மிருதிகளிலும் கீழ் உபநிஷத்துக்கு சொல்லியவிதம் மார்க்கங்களை தனித்தனியேயும் சேர்த்தும் உபதேசிப்பதும் வழக்கம். இவ்விதம் பலவிதமான ஸ்மிருதிகளிருந்தும் கீழ்சொல்லிய ஞான உபாஸ்திமார்க்கங்களையும் சர்வஜனவுபகாரமாயும் முதல்படியாயுமிருக்கிற தர்மமார்க்கத்தையும் மிகவும் தெளிவாயும் இனிமையான லகுவான பதங்களால் உபதேசிக்கும் நமது பகவத்கீதையானது பூர்வாசாரியர்களால் முதன்மையாய் அங்கீகரிக்கப்பட்டது. அதில் மூன்று மார்க்கங்களின் சாரங்களும் நன்றாய் உபதேசிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே கீதாசாஸ்திரமானது வேதத்திலுள்ள தர்ம உபாஸ்தி ஞானமென்னும் மூன்று காண்டமாய் விளங்குகிறது. இது அத்வைத மதத்தில் இரண்டாவது பிரஸ்தானமாய் அங்கீகரிக்கப்படும்—கீதா பிரஸ்தானம்.

14. இவ்விதம் உபநிஷத்து ஸ்மிருதிகளில் மூன்று விதமாய் வெளியிடப்பட்ட பரம சித்தாந்தத்தை ஸ்ரீ நாராயணவதாரமான பகவான் வியாஸாசாரியார் சந்தேகிக்கக்

கூடிய விஷயங்களை சாஸ்திரீயமான தக்க யுக்திகளால் நிலை நாட்டிக்கொடுக்க பிரம்ம மீமாம்ஸையென்னும் வேதாந்த தர்சனத்தை செய்தார்கள். சுருதி ஸ்மிருதிகளின் கருத்தை வெளியிடுவதான சாஸ்திரமாயிருப்பதால் தான் இதற்கு வேதாந்த தர்சனமென்று பிரசித்தி ஏற்பட்டது. இந்த தர்சனத்தில் உபநிஷத்து முதலானவைகளில் சொல்லப்பட்ட கர்ம உபாஸ்தி ஞானமென்ற மூன்றுபடிகளின் தாரதம்மியத்தையும் அவைகளுக்குள்ள சம்பந்தத்தையும் அவைகளின் பிரயோஜனத்தையும் நன்றாய் உபதேசித்திருக்கிறார்கள். இது மூன்றாவது பிரஸ்தானமாய் கணக்கிடப்பட்டிருக்கிறது—ஸூத்திரபிரஸ்தானம்.

15. இவ்விதம் மூன்றுபடியாக வெளியிடப்பட்ட கர்மம் உபாஸ்தி ஞானம் இவைகளில் ஞானத்துடன் மற்ற இரண்டும் சேர்க்கை அடைவதில்லை. முதல் இரண்டும் தனித்தனியாயும் அனுஷ்டிக்கப்படும் சேர்ந்தும் அனுஷ்டிக்கப்படும். அந்த கர்ம உபாஸ்தி இவ்விரண்டும் அதிகாரிகளின் புத்தி பேதத்தால் இருவகைப்படும். அதாவது ஸகாமம் என்றும் நிஷ்காமம் என்றும். பலத்தில் ஆசையுடன் செய்வது ஸகாமம்; ஞானோத்தேசத்தால் செய்வது நிஷ்காமம். வேதாந்தங்களில் கர்மாவையும் உபாஸ்தியையும் பற்றி நிந்திப்பதெல்லாம் ஸகாமத்தைப் பற்றியேயல்லது நிஷ்காமத்தைப் பற்றியதல்ல. ஸகாமமானவைகளின் பிரயோஜனம் ஸம்சாரி தசையில் மேன்மையே. நிஷ்காமமாகிய இவ்விரண்டும் ஞானத்திற்கு சாதனமாய் சாஸ்திரங்களில் விசேஷமாய் கீதையில் சொல்லப்பட்டிருக்கின்றன. இவ்விரண்டு சாதனங்களும் ஞானத்திற்கு நேர் சாதனமான சிரவண மனன நிதித்தியாசனங்களுக்கு தக்க யோக்கியதையை மாத்திரம் உண்டு பண்ணுகிறது. இவ்விரண்டிலும் கர்மாவென்பது வெளிப்படையான சாதனம், உபா

ஸ்தி என்பது அதற்கும் கிட்டினதான சாதனமாகும். பிராணிகளின் சித்தத்திற்கு பிரம்ம ஞானத்தைத் தடுக்கிற தான இரண்டு தோஷங்கள் ஸ்வயமாய் ஏற்பட்டது. அதாவது காமமென்றும் சாஞ்சல்யமென்றும் இவ்விரண்டு விதமான தோஷங்கள் உள்ளவரையில் மனிதன் ஞானத்திற்கு யோக்கியனாகமாட்டான். இவ்விரண்டு தோஷங்களில் காமம் என்னும் முதல் தோஷத்தை விலக்கிக் கொடுப்பது கர்மயோகமும் சாஞ்சல்யமென்னும் இரண்டாவது தோஷத்தை விலக்க ஏற்பட்டது உபாஸ்தி யோகமுமாம். இதினாலேயே கர்ம உபாஸ்தியோகங்களின் அனுஷ்டான காலமும் இவ்வளவென்று நிச்சயமாகும்.

16. இவ்விதம் இரண்டு தோஷமும் நிவர்த்தித்த சித்தமுடைய புருஷர்கள் பிரம்மஞானத்துக்கு அதிகாரிகள் ஆவார்கள்.

17. ஞானத்துக்கு நேர் சாதனங்கள் மூன்று. சிரவணம் மனனம் நிதித்தியாஸனம். இம்மூன்றுகளில் முதல் இரண்டு சாதனம் சாஸ்திர ஆசார்யமூலமாக செய்துகொள்ளவேண்டும். சிரவணமென்பதற்கு கேட்பதென்று அர்த்தமாகையால் சொல்லுபவரன்றி அது ஒருக்காலும் நடவாது. இது காரணத்தால் தான் சாஸ்திரங்களில் ஞானத்திற்கு குரு அவசியமென்று திடமாய் சொல்லியிருக்கிறது. இதுபோல் மனனமென்பதற்கு தனக்கு நேரிடும் சந்தேகங்களை தக்கயுக்திகளால் நிவர்த்தித்துக்கொள்வதென்று அர்த்தமாகையால் அவ்விதமான யுக்தியை வெளியிடும் சாஸ்திரமும் ஆசார்யருமன்றி அது நிறைவேறுவது பிரயாசைப்படும். இவ்விரண்டு சாதனங்களும் கீழ் சொன்ன பிரஸ்தானங்களில் அடங்கியன. அதாவது உபநிஷத் ஸ்மிருதி என்றும் இரண்டு பிரஸ்தானங்களில் சிரவணமும் ஸூத்திரபிரஸ்தானம் முழுமையும் மனனமும்

பூர்த்தியாயிருக்கிறது. உபநிஷத்துகளிலும் பெரும்பாலும் பிரஹதாரண்யத்தில் மனனமென்னும் சாதனம் நிறைவேறக்கூடிய பாகங்கள் உண்டு. இவ்விரண்டு சாதனத்தையும் தீர்மானமாயடைந்த ஒரு அதிகாரி நிதித்யாசனம் என்னும் மூன்றாவது ஸாதனத்தை தான் ஏகாந்தமான தேசத்தில் சாதித்துக்கொள்ள வேண்டும்.

18. இம்மூன்று ஸாதனங்களும் ஆத்மாவென்னும் ஒரே வஸ்துவை பற்றியது. ஆத்மவஸ்துவானது வியவஹாரதசையில் இருவகைப்படும். அதாவது ஜீவன் என்னும் பிரம்மம் என்றும் இவ்விதமான வேற்றுமையும் ஆத்மாவின் ஸ்வரூபத்தைப் பற்றியதல்ல. அநாதி சித்தமாய் இரண்டுவிதமான உபாதிகளை அதாவது ஜட வஸ்துக்களை பிடித்துக்கொண்டு ஏற்பட்டதாகும். இவ்விரண்டைப் பற்றிய சிரவணத்திற்கு பதார்த்த விசாரமென்று பெயர். ஜீவரூபமும் பிரம்மரூபமும் நம்முடைய பிரத்தியக்ஷ அனுமானங்களுக்கு தோற்றியபடியே இருக்கலாமென்பது உண்மையாகாது. ஒரு ஜீவரூபத்தைப்பற்றியே நமது அனுபவம் இவ்வளவு விதமென்று சொல்லமுடியாது. புருஷனுடைய தோற்றப்படியெல்லாம் வஸ்து இருக்காது. ஆகையால் புருஷனுடைய தோற்றத்தையே சித்தாந்தமாகக்கொள்வது யுக்தமல்ல. புத்திபேதத்தால் தான் ஆத்துமாவைப் பற்றி பலவிதமான மதபேதங்கள் யேற்பட்டன. ஆத்மவஸ்துவுக்கு புருஷபுத்தி பிரமாணமாகமாட்டாது. வேதாந்தமொன்றே பிரமாணமாகும். வேதாந்தமானது ஆத்மவஸ்துவின் உண்மையை நிரூபிக்க அதிக பிரயாசைப்படுகிறது. அதற்கு காரணம் ஆத்மவஸ்துவில் நமக்கெல்லாம் ஏற்பட்ட புத்திபேதமே. ஆகையால் ஆதியில் ஜீவன் என்று தோன்றும் ஆத்மவஸ்துவை நமக்கு தோன்றும் சரீரம் இந்திரியம் முதலிய ஜடபதார்த்தங்களை விட்டு விலக்கி சுத்

தமான ரூபமாய் தெரிவித்துக்கொடுப்பது உபநிஷத்தின் சில பாகங்கள்.

19. இதுபோல் பிரம்மவஸ்துவின் சுவரூபத்தைப் பற்றியும் பலவிதமான புத்திபேதங்களையும் நிராகரித்து அதின் உண்மையான ரூபத்தை வெளியிடுவது சில பாகங்கள்.

20. இவ்விதமாய் வெளியிடப்பட்ட இரண்டு பதார்த்தங்களுக்கும் உண்மையான சம்மந்தம் என்னவென்றால் சுவரூபமே ஒன்றேயொழிய வேறு சம்மந்தமில்லையென்ற சித்தாந்தத்தை சொல்லிக்கொடுக்கும் உபநிஷத்து பாகங்கள் சில. இந்த ஸித்தாந்தம்தான் அத்வைதமெனப்படும்.

21. இந்த அத்வைதமானது சர்வ சாஸ்திரங்களில் வெளியிடப்படுவதுபோல் யுக்திக்கும் மிகவும் பொருத்தமாயிருக்கிறதென்பது ஜாக்ரத், ஸ்வப்ன, ஸுஷுப்தி, ஸமாதி என்னும் நான்கு அவஸ்தைகளை நன்றாய் விசாரிப்பவர்களுக்கு மிகத்தெளிவாய் யேற்படும்.

22. இவ்விதமான பெரிய ஸித்தாந்தமானது பலகாரணங்களால் மிக்ககுறைவடைந்திருக்கும் இச்சமயத்தில் நம் தேசத்து ஜனங்களுக்கு நமது ஸித்தாந்தத்தில் நல்ல நம்பிக்கை இருக்கும்படி செய்து பலவித யுக்திகளாலும் தற்கால பதார்த்த சாஸ்திரங்களுக்கு ஒத்தபடியும் நிரூபித்து புத்திபேதமுடைய நாஸ்திகர்களுக்குகூட ஸமரஸபுத்தியுண்டாகும்படி செய்து ஆங்காங்கு சமாஜங்களாலும் பிரசங்கங்களாலும் கிரந்தங்களாலும் நம்முடைய அத்வைதமதம் பிரகாசிக்கும்படி சிலகாலமாய் நம்தேசத்தில் நடந்துவரும் முயற்சியானது விசேஷமாய் ஆனந்திக்கத் தக்கது.

23. இவ்விதமான சமயத்தில் நமது ஸித்தாந்தத்தை யதா சாஸ்திரமாய் வெளியிடத்தக்க சந்தோஷத்துடன் பிரசித்தமான ஸ்ரீ சங்கரபகவத் பாதாசாரியாள் காமகோடி பீடத்தின் வாசஸ்தானமாகிய கும்பகோண நகரத்தில் நமது பெரியோர்களால் அத்வைத ஸபை ஸ்தாபிக்கப்பட்டு பல கனவான்களின் ஆதரவுடன் மேன்மேலும் விருத்தியடைந்துகொண்டு வருகிறது. இந்த பிரஸங்கத்தையும் ஷை சபையின் காரியங்களில் ஒன்றாய் க்ரகித்துக்கொள்ளவேண்டும்.

24. இவைகளுக்குத்தக்கபடி இந்த ஊரிலும் மற்ற சில இடங்களில் போல் சங்கரஸமாஜம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு பிரதிவருஷமும் சங்கரஜயந்தி உற்சவம் மிக்க ஆதரவுடன் பல ஆஸ்திகர்களால் அனுஷ்டித்துவருவதை கேட்டு விசேஷ ஆனந்தம் உண்டாகிறதென்று தற்காலம் இவ்விடம் விஜயமாயிருக்கும் ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகளின் அபிப்பிராயத்தை எனது சந்தோஷத்துடன் சாஸ்திரியர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். இவ்விதமான சமாஜங்களுக்கும் இவைகளில் நடந்துவரும் ஆசார்ய ஜயந்தி முதலிய உற்சவங்களுக்கும் நமதுதேசத்திலுள்ள ஆஸ்திக கனதனவான்கள் விசேஷ ஆதரவை செலுத்தி ஸ்ரீ பகவத்பாதாசார்யாள் பிரஸாதமூலியமாய் சந்திரமௌளீசுவரஸ்வாமியின் அனுக்கிரஹத்தை அடைய பிரார்த்திக்கின்றேன். ஓம். தத். ஸத்.

ஸ்ரீ லக்ஷ்மீதேவி.

ஸ்ரீபதியின் அன்பேயுருவாய் அகிலலோகத்தையும் அழகுசெய்து விளங்கிவரும் அன்னை மகாலக்ஷ்மியை ஆச்ரயிப்பார் எவரும் இந்த லோகமாதாவை என்றும் பூஜிப்பதால் குபேராதிகள் அகண்டமான ஐசுவரியங்களை அனுபவிக்கின்றார்கள். இந்த தேவிக்குப் பூஜார்ஹமான புஷ்பமாலையை உபேக்ஷித்ததால் மகேந்திரன் வெகுகாலங்கள் சிரமத்தை யடைந்தான். அவனை மறுபடியும் அனுக்கிரகிக்கவே பாற்கடலிலிருந்து ஆவிர்ப்பாவத்தை யடைந்து லோகநாதனை ஸ்ரீமந்நாராயணமூர்த்தியைப் பதியாய் ஸ்ரீலக்ஷ்மீ தேவி வரித்தாள். ஆயிரந்தளமுள்ள தாமரையில் வீற்றிருந்து புன்னகையுடன் நாதனைப் பார்த்தவண்ணமே கடாக்ஷங்களைப் பக்த ஜனங்களிடத்தில் செலுத்திவரும் விதமாய் இம்மாதாவை தியாநிப்பவர்கள் சகல பாக்யங்களும் பெற்று மகிழ்வார்கள். ஆதலால் இம்மகாலக்ஷ்மியின் கிருபைக்குக் காரணமான வழிகளில் புத்திமான்கள் நிற்கவேண்டும். பிதா மாதாக்களையும் ஆசார்யர்களையும் தெய்வங்களையும் தினமும் பணிந்தால் அதுவே தேவிக்குப் பி யகரமான பூஜையாகும். பொய்யைக் கனவிலும் நினையாமல் இல்லையென்று ஒன்றையும் சொல்லாமல் இருப்பதே தேவிக்குச் சந்தோஷகரமான கைங்கர்யமாகும். செய்நன்றி மறவாமலும் நம்பினவர்களைக் கைவிடாமலுமிருப்பதே தேவிக்கு மனோஹரமான த்யானமாகும். தேவியின் கிருபைக்குப் பாத்திரமானவன் கவலையற்றவனும் பயமில்லாதவனும் அஜாதசத்ருவும் ஏராளமாய் ஈதலுள்ளவனுமாவான். அவன் புருஷோத்தமனாய் விளங்குவதேயன்றி

ஸ்திரீகள் வசப்பட்டு அவர்கள் கையில் பம்பரம்போல் ஆகும் பேதையாகப் பிரமிப்பதில்லை. அவன் கண்ட விடங்களில் சென்று கண்டபடியெல்லாம் நடத்திக் கண்டதைச் சாப்பிட்டுக் கலக்கம் கொள்ளமாட்டான். துர்வார்த்தைகளும் கலகக்குறிகளும் பாபவெண்ணங்களும் பெண்கள் நாட்டாமைக்குட்படுதலும் அவனிடம் காணக்கிடைக்கா. அவன் சிவன், விஷ்ணுவென்று பேதம் பாராட்டாது, இஷ்டதெய்வங்களையும் மற்றதெய்வங்களையும் சிரத்தையுடன் தினமும் போற்றுவான். பெண்களையும், அன்னத்தையும், வேதத்தையும், விற்கவேண்டுமென்ற நரகபலனைத் தரும் எண்ணங்கள் அவனிடம் கனவிலும் உதிக்கமாட்டா. தன்னாலோ, பிறராலோ தானம் செய்யப்பட்ட சொத்துக்களை அபகரிப்பது, பிறர் தொழிலை கைப்பற்றுவது, தக்ஷிணையின்றி யாகாதிகளை இயற்றுவது முதலிய செய்கைகள் அவனிடம் காணப்படா. அவன் தாயாரையும், தந்தையையும், ஆசார்யகுலத்தையும் தன்னிடம் வந்திருக்கும் சகோதரிகளையும் கன்னிகைகளையும் செலவைப்பாராமல் ஆதரவாய்ப் போஷிப்பான். மேன்மையையே பெறப் பிறந்த அவன் ஈரக்கால்களுடன் சயனிக்கமாட்டான். அதிகமாய் தூங்கமாட்டான். ஸந்தியாகாலங்களிலும் பகலிலும் சயனத்தை அபேக்ஷிக்கமாட்டான். நகங்களுகளினால் த்ருணங்களைக் கிள்ளமாட்டான். தரையில் கீரமாட்டான். உடம்பை அழுக்குப்படியும்படி வைத்துக்கொள்ளான். மந்திர தந்திரங்களாலும் சூதுவாதுகளாலும் அவன் ஜீவிக்கமாட்டான். விவாஹத்தையும் தர்மங்களையும் கோபதாபங்களால் குறைவாகச் செய்யமாட்டான். பகலில் சிற்றின்பங்களைச் சிந்திக்கமாட்டான். அழுக்கு வஸ்திரம் தரித்தல் பல் முதலான அங்கங்களை அசுத்தமாய் வைத்துக்கொள்ளல், வயிறு வீங்க உண்ணல், கடுகடுப்பாய் வசனித்தல், உதயாஸ்தமனங்களில் உறங்கள், முதலான விபரீதங்கள்

அவனிடம் ஏற்படமாட்டா. சிரஸ்ஸை நன்ருய் க்ஷாளனம் செய்தலாலும் கைகால்களை நன்ருய் அலம்பிக்கொள்வதாலும், தனது தாரத்தினிடம் காலமறிந்து ரதியையடைவதாலும், மிதமாய் உண்பதாலும், வஸ்திராபரண பூஷிதனுகவே சயனித்தலாலும், தன்னிடம்விட்டு என்றும் விலகாமலிருக்கும்படி லக்ஷ்மிதேவியைப் பரிபாலிப்பான். வெண்மையான மல்லிகாதி புஷ்பங்களைத் தினமும் சிரஸில் தரிப்பதால் தேவிக்கு மகிழ்ச்சியைவிளைவிப்பான். தீப நிழலிலும், படுக்கை நிழலிலும், பரஸ்தரீ நிழலிலும், அவன் ஒருநாளும் ஒதுங்கி நில்லான். ஸ்ரீமகாலக்ஷ்மியானவள் மனுஷ்யனது பாததத்தில் நின்று கிருஹாராமாதிகளைத் தருவாள். துடையில் நின்று வஸ்திராபரணுதிகளைக் கொடுப்பாள். மத்யத்தில் நின்று தகுந்த பத்நியைச் சேர்ப்பிப்பாள். வயிற்றில் நின்று நன்மக்களை ஈன்றிடுவாள். ஹிருதயத்தில் நின்று மனோரதங்களையெல்லாம் தந்திடுவாள. நெஞ்சத்தில் நின்று ஹாரங்களையும் இஷ்டபந்து மித்ரர்களையும் வெகுஜனப்ரீதியையும் மிஷ்டான்னத்தையும் வாங் மாதுர்யத்தையும் செல்வாக்கையும் கொடுத்திடுவாள். முகத்தில் நின்று கல்விச்செல்வத்தையும், கீர்த்தியையும் அளித்திடுவாள். சிரஸில் நின்று எல்லோரும் வணங்கும்படியான மேன்மையைப் பிரஸாதம் செய்வாள். இந்த லோகமாதா வீற்றிருக்கும் இடங்களில் இன்பம் தரும் இல்லாளும், வாஞ்சைமிகுந்த பந்துக்களும் சேர்வார்கள். தங்கம்போன்ற தானியங்களும வெள்ளியை நிகர்க்கும் அரிசியும் உமிபடியாத அன்னமும் குவியும். தர்மசீலர்களும் ஜிதேந்திரியங்களும், வித்வான்களும், சமர்த்தர்களும் கூடுவார்கள். லக்ஷ்மீவிலாசம பெற்றவர்கள் நின்று நீராடி துரிதமாய் உண்டு, புஷ்பத்தை மோந்துகொள்ளாமல் வாங்கித் தரித்துக்கொண்டு, வஸ்திராலங்கார பூஷி

தையான பத்தினியிடம் சல்லாபிப்பார்கள். தானமும் மெய்மையும் தூய்மையும் அவனை என்றும் விடமாட்டா. நெல்லிக்காயையும் கோமயத்தையும் சங்கபத்மங்களையும் வெள்ளை வஸ்திரத்தையும் லக்ஷ்மிக்குப் பிரியமானவை என்று தேடியுபயோகிப்பான். சிவ விஷ்ணுக்களையும் சந்திரசூரியர்களையும் லக்ஷ்மீதேவியின் நித்யோத்ஸவஸ்தானங்களென்றெண்ணித் தினமும் பூஜிப்பான். லக்ஷ்மீவிலாசம் பொருந்திய ஸ்திரீகள் பெரியோருக்குக் கீழ்ப்படிந்து குருக்களிடம் பக்தி மிகுந்து பதியின் வார்த்தையைக் கனவிலும் தாண்டாமல் விளங்குவார்கள். சந்தோஷமும் தைர்யமும் பிரியவாதமும் சௌபாக்யமும் லாவண்யமும் அவர்களிடத்து நிறைந்து காணப்படும். அழகும் அழகைப் பெருமைப்படுத்தும் பார்வையும் நுட்பமான இடையும் நீலமான கூந்தலும் பதியினிடத்தில் அளவற்ற நேசமும் அவர்களிடத்து நிலைநிற்கும். பாப எண்ணங்களும் கோட் சொல்லுதலும் புருஷனுக்கு வேலையிடுதலும் கண்டபடி நடத்தலும் அவர்களிடம் ஏற்படாது. இந்த லக்ஷணங்களுடைய ஸ்திரீகளும் புருஷர்களுமே வர்ணாசிரம சேதுவின் பரிபாலனத்திற்கு இன்றியமையாத ஸாதனங்களாதலால் இத்தகைய ஸ்திரீ புருஷரத்னங்கள் உலகத்தில் மலியவேண்டுமென்று ஸ்ரீலக்ஷ்மீதேவி ஆசைப்படுகிறாள். அவ்வாசைக்கனுகூலமாய் நம்மார்யதர்மத்தை அபிமானிக்கும் ஸ்திரீ புருஷர்கள் நடந்துகொள்வார்களென்றும் அதனால் தங்கள் தங்களுக்கும் தங்கள் தங்கள் ஆசரணங்களால் நமது தேசத்திற்கும் அஷ்டைசுவரங்களின் அபிவர்ஷத்தைச் சேர்ப்பிப்பார்களென்றும் இவைகளுக்குக் காரணமான ஸ்ரீமகாலக்ஷ்மியின் பலபூர்ணகடாக்ஷங்களுக்கு எல்லோரும் பாத்திரமாவார்களென்றும் நிச்சயித்து இவ்வியாசத்தை வரையலானேன்.

ப. கி. கல்யாணராமசாஸ்த்ரி.

அபூர்வமான பக்ஷிகளின் உபயோகங்கள்—வஞ்சுளகம்,

ஈச்வர சிருஷ்டிகளில் அபூர்வமான பக்ஷிகள் இருந்ததாகப் பூர்வீக புராதன க்ரந்தங்கள் அறிவிக்கின்றன. மேனாட்டினர், எவ்வளவோ அருமையான பக்ஷிகளைக் கண்டு பிடித்து அதனுடைய சரித்ரங்களை எழுதியுள்ளார்களாயினும, ஸ்ரீராமாயணத்திலும், பாரதத்திலும், இவைபோன்ற ஹிந்துக்ரந்தங்களிலும் அக்கிரந்தாசிரியர்கள் அநுபவத்தில் கண்டு எழுதிய பக்ஷிகளைப்பற்றியும் எழுதியிருக்கிறார்களோ என்று சொல்வதும் முடியாது.

வஞ்சுளகம்:—இஃது தண்டகாரண்யத்தின் ஒரு பாகமாகிய க்ரௌஞ்சாரண்யத்தில் லக்ஷ்மணன கண்ட பக்ஷிகளில் விசேஷமானதொரு பக்ஷியென்று வால்மீகி, தமது ராமாயணத்தில் எழுதுகிறார். ஸ்ரீ ராம லக்ஷ்மணர் அயோமுகி என்ற ராக்ஷஸியை மானபங்கப் படுத்தியபின் கிரௌஞ்சாரண்யத்தில் நடந்து செல்கையில் இப்பக்ஷி சப்தம் லக்ஷ்மணன் காதில பட்டது. இதைக் கேட்ட லக்ஷ்மணன், இனியொரு யுத்தம் நடக்கவிருக்கிறதென்றும் இப்பக்ஷி குறிக்கிறதென்றும், அதில் நமக்கே ஜயமுண்டாகிறதென்றும் அப்பக்ஷி தன் கத்தலினால் தெரிவிப்பதாகவும், வஞ்சுளகம் என்னும் பக்ஷிக்கு அப்படியான சக்தியுள்ளதென்றும் எடுத்துக் கூறினார். அவர் ஸ்ரீ ராமனுக்குக் கூறின பிரகாரம் இவர்கள் கபந்தநு என்னும் ராக்ஷஸனை எதிர்த்து அவன் நீண்ட இருகைகளையும் வெட்டித் தரித்து ஜயமடைந்தனர் என்பர். ஆகவே, பக்ஷிகளினு

லேயும் அறியக்கூடிய விஷயங்கள் அநேகமுள்ளன என் அறிந்து, அவற்றைத்தம் ஆஹாரத்திற்காகவும். அதன் இறகு முதலியவற்றிற்காகவும அவற்றை லக்ஷோப லக்ஷமாகக் கொன்று குவிக்கும் நம்மிந்திய உலகும் மற்ற தேசங்களும் ஞாபகத்தில்வைத்து அவற்றிற்கு தக்கவாறு செய்யவேண்டும். இப்பக்ஷிகளினபால் ஜீவகாருண்யம்வைத்து அவற்றிற்கு ஊறுசெய்யக்கூடாதென்பதே ஹிந்துக்களின் கொள்கை. அவற்றின் மேன்மையை விவரித்தே பக்ஷி சாஸ்த்ரங்கள் என்னும் புத்தகங்கள் நம்மவருள் ஏற்பட்டிருக்கின்றன. அவற்றில் இன்ன பக்ஷி இன்னவிடத்தில் இம்மாதிரி சத்தினுலும் வலம் வருதல், இடம்போதல் முதலிய சலன (அசைவு) விசேஷங்களினுலும் இன்னின்ன பலன்கள் உண்டாகும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த சாஸ்திரங்களை அப்யஸித்து ப்ரக்யாதி யடைந்தவர்க்கு முன் காலத்திய ராஜாங்கத்தாரும் மானியங்கள் முதலியனவளித்து அச்சாஸ்திரத்தில் அபிருசி காட்டி வந்தனர். மஹாபாரதத்தில் தாமபுத்திரர் என்ற மஹாராஜனே, பட்சி சாஸ்த்ரத்தில் கைதேர்ந்தவர் என்று அப்புத்தகத்தில் விராடபர்வம் கூறும். விராட நகரில் அவர் மாறுவேடம் பூண்டிருந்தபோது, ராஜனுக்கு அருகில் இருந்து இம்மாதிரி சாஸ்த்ரத்தை விராடன் அறியுமாறு அப்போதப்போது சொல்லி ஆநந்தமூட்டியும் அறிவுறுத்தியும் வந்தனர் என்று சொல்வர். ஆதலின் பக்ஷிகளினுல் போதரும் நற்பயன்களை யுத்தேசித்து எவற்றையும் வெரும் அன்புடன் போற்றக் கடவர். ஊனைத் தின்றூனைப் பெருக்காமை முன்னினிதே என்றார் கபிலதேவரும்.

பண்டித வீ. சுப்பிரமணிய ஐயர்.

மாயாசாஸ்திரம்.

(முன்தொடர்ச்சி.)

தீக்ஷை பெற்றவுடன் குருவின் வார்த்தையை மீறக்கூடாதென்கிற ஏற்பாட்டினால் அவர் உபதேசம் செய்தபடி வேதத்தை நிந்தித்துத் தர்மமார்க்கத்திலிருந்தும் நழுவி நாசமடைந்தான்.

धर्मास्तत्र प्रकाशन्ते श्रौतस्मार्ता न संशयः ।
अनया विद्यया सर्वे स्फोटनीया ध्रुवं यते ॥
ततो धर्मं संप्रकाश्य विनाशय पुरत्रयम् ।
ततश्चैव पुनर्गत्वा मरुस्थल्यां त्वया विभो ।
स्थातव्यं च स्वधर्मेण कलिर्यावत्समाव्रजेत् ।
प्रवृत्ते तु युगे तस्मिन् स्वीयो धर्मः प्रकाश्यताम् ।
मदाज्ञया भवद्धर्मो विस्तारं यास्यति ध्रुवं ॥ शिव. रुद्र. अध्या. ५.

5. வேன மகாராஜன் தர்மத்தில் பிரவிருத்தி உடையவனாக இருந்தும் தன் தாயாருக்கு ஏற்பட்ட சாபத்தை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவர வேண்டியதற்கு ஈசுவரனே நக்ன ரூபியாக அவனுக்கு மாயா சாஸ்திரம் உபதேசம் செய்தார். அந்த உபதேசத்தால் வேதத்தில்சிரத்தை குறைந்து தர்மத்திலிருந்தும் நழுவி துக்கமடைந்து பிறகு ஈசுவரனனுக்கிரஹத்திற்குப் பாத்திரமானான்.

यस्त्वां पातकरूपोऽहं सुनीथा याः परंतप ।
अब्रुवं नग्नरूपेण कर्तुं त्वां तु विधर्मगम् ॥
अन्यथा तु सुशंखस्य वाक्यमेवान्यथा भवेत् ।
अतो विधिर्निषेधश्च ह्यहमेव नृपोत्तम ॥ (पद्मपुराणं भूमिखण्डम्)

இவ்விதமாக மாயாசாஸ்திரம் முன்காலத்திலும் தர்மத்திற்கு விக்னம்செய்ய உபதேசம் செய்யப்பட்டதாக தெரிய

வருகிறது. அந்த சாஸ்திரத்தின் உபதேசங்களை நான் சுருக்கமாக எழுதுகிறேன்.

6. தர்மம் தயை—பிர்மாதி தேவர்களின் ஸ்தூலதேகத்தையும் மனுஷியர்கள் முதலிய ஜந்துக்கள் ஸ்தூலதேஹத்தையும் விசாரித்தால் பிர்மாதிகிடபரியந்தமுள்ள ஜந்துக்கள் தங்கள் கர்மத்தால் தேகமடைந்து நாசமடைகிறார்கள். சாதாரணமாக ஜனங்களுக்கு நாமாக்கள் ஏற்படுவது போல பிர்மாதி தேவதைகளுக்கும் ஏற்படுகிறது. பிர்மாதிகள்தேகத்திற்கும் நம்முடைய தேஹத்திற்கும்பேதமில்லை. ஆஹாரம், நித்திரை, பயம், வியவாயம் முதலிய தர்மங்கள் எல்லாத் தேகங்களுக்கும் பொதுவானதல்லவா? இவைகள் குறைவால் சுகக்குறைவு ஏற்படுவதும் ஜாஸ்தியால் திருப்தியேற்படுவதும் சமானமாகவேயிருக்கிறது. நமக்குத் தாகம் ஏற்பட்டால் நல்லஜலம் சாப்பாட்டுக்கு திருப்தியடைவதுபோல் பிர்மாதி பீடங்களும் திருப்தி அடைகிறார்கள். கட்டிலின்மேல் படுத்துறங்கும் ராஜனுக்கும் பூமியில் தூங்கும் சந்நியாசிக்கும் சுஷுப்தி அவஸ்தையில் ஏற்படும் சுகம் சமானமல்லவா? ஆகையால் பிராணிகளின் தேகங்களில் தாரதம்யம் ஏற்படமாட்டாது. ஒருவன் மற்றப்பிராணிகளுக்கு ஹிம்ஸை உண்டாக்கக்கூடாது. அஹிம்ஸை முக்கியமானதர்மம். தன் தேகத்தை உபவாஸத்தாலும் மற்றவன் தேகத்தை ஹிம்ஸை செய்வதும் பாபம். பராதீனமாக இராமல் ஸ்வதந்தரமாகை இருப்பது முக்தி. வேண்டிய வஸ்துவை புஜிப்பது சுவர்க்கம். பிராணி ஹிம்ஸை செய்பவன் நரகத்தையும், ஹிம்ஸை செய்யாதவன் சுவர்க்கத்தையும் அடைவான். முக்கியமாக விதிக்கப்பட்ட தர்மங்களில் நான்கு தர்மம் அவசியம் அனுஷ்டிக்க வேண்டும். "பயமடைந்தவனுக்கு அபயதானம், வியாதி உள்ளவனுக்கு ஒளஷததானம், வித்யார்த்திகளுக்கு வித்

யாதானம், பசித்தவனுக்கு அன்னதானம்.'' அர்த்தங்களைச் சம்பாதித்து 5 கர்மேந்திரியம் 5 ஞானேந்திரியம் புத்திமனது என்கிற 12 ஆயதனங்கள் என்னும் வீடுகளைப் பூஜிக்க வேண்டும். ஜரை முதலியவைகள் தேகத்திற்கு ஏற்படாத வரையில் சுகமாக இருப்பதுதான் முக்கியமான தர்மம். பசுவை ஹிம்ஸித்து யாகம் செய்வதால் பசுவிற்கு நல்ல கதி ஏற்படுகிறது என்று சுருதி சொல்லுகிறது. அப்படி ஜோதிஷ்டோமாதியாகங்களில் ஹிம்ஸிக்கப்படும் பசுவிற்கு சுவர்க்கம் ஏற்படுவது வாஸ்தவமானால் யஜமான் தன் தகப்பனுக்கு நல்லகதி உண்டாக்க அவரை அதே யாகத்தில் ஹிம்ஸித்துவிடலாமே.

पशुश्चेन्निहतः स्वर्गं ज्योतिष्टोमे गमिष्यति ।
स्वपिता यजमानेन तत्र कस्मान्न हिंस्यते ॥

சசபிந்து என்கிற அரசன் அநேக யாகங்கள் செய்து அவைகளில் ஹிம்ஸிக்கப்பட்ட பசுக்களின் சர்மா மலை போல் குவிந்துவிட்டது. மேகங்கள் மழை வர்ஷிக்க சர்ம மலையிலிருந்து உண்டான நதி சர்மண்வதி என்று பெயரடைந்து ராஜாவும் சுவர்க்கலோகம் அடைந்து கீர்த்திபெற்றான் என்று தேவிபாகவதம் 1வது ஸ்கந்தத்தில் 18வது அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

वेदधर्मेषु हिंसा स्यादधर्मबहुला हि सा ।
कथं मुक्तिप्रदो धर्मो वेदोक्तो बत भूपते ॥
यत्प्रत्यक्षेण त्वनाचारः सोमपानं नराधिप ।
पशूनां हिंसनं यद्वद्भक्षणंचामिषस्य च ।
सौत्रामणौ तथा प्रोक्तः प्रत्यक्षेण सुराग्रहः ॥
द्यूतक्रीडा तथा प्रोक्ता व्रतानि विविधानि च ।
(देवीभागवते १. स्कन्धे ४. अध्यायः)

வேதங்களால் விதிக்கப்பட்ட தர்மங்கள் ஹிம்ஸையுடன் கூடியது. அவைகள் எவ்விதம் முக்தியைகொடுக்கும். பசுக்

களை ஹிம்ஸை செய்வதும், ஸோமபானம் செய்வதும் மாம்ஸம் சாப்பிடுகிறதும், ஸௌத்ராமணியாகத்தில் சுராபானம் செய்வதும் த்யூதக்ரீடை முதலியவைகளுடன் கூடியதும்ாக இருக்கிறது என்று சுகர் ஜனகரைக்கேட்டதாகச் சொல்லப்படுகிறது.

7. வேதம்—இப்படிக்கிருக்கையில் இப்பொழுதுபடித்ததாக அஹங்காரம்கொண்ட மூடர்கள் வேதம் ஒன்று ஏற்பட்டிருப்பதாகவும், அதில் கர்மாக்கள் செய்யவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறதென்றும், அந்த கர்மாக்களைச் செய்வதால் சுவர்க்கலோகமடைந்து சுகித்திருக்கலாமென்றும், சிலகர்மாக்கள் நிஷேதிக்கப்பட்டிருக்கின்றனவென்றும், அவைகளைச் செய்வதால் நரகத்தில் துக்கமடைவார்களென்றும், மனதில் ஏதோ வாஸனை ஏற்பட்டிருப்பதுபோலும், பஞ்சகிலேசங்கள் உண்டாவதற்கு மனது காரணமென்றும், வாஸனையை க்ஷயிக்கச்செய்து பஞ்சகிலேசத்தையும் நிவர்த்தித்து அஞ்ஞானத்தை நசிக்கச்செய்வதால் மோக்ஷமடையலாமென்றும், சுருதியில் சொல்லப்பட்டிருக்கிறதாக் ஜனங்களை வஞ்சித்துவிடுகிறார்கள். சுவர்க்கம், நரகம் என்கிற உலகங்கள் வேறாக இருக்கிறதா? இல்லவே இல்லை. நாம் சுகித்திருப்பதுதான் சுவர்க்கம். நாம் துக்கமடைவது தான் நரகம். சுகத்தை அனுபவித்துக்கொண்டே தேகவியோகமடைவதல்லவோ மோக்ஷம். இதை அறியாமல் மேலாக சுவர்க்கலோகம் இருப்பதாகவும் பிராணிகளிடத்தில் தயைவைக்காமல் அவைகளை ஹிம்ஸித்து ரக்தப்பிரவாஹம் உண்டாக்கி விருக்ஷங்களை எல்லாம் வெட்டிச் சாப்பிட்டுச் சுகமடையக்கூடிய நெய்யை அக்நியில் ஊத்தி சாம்பலாக்கிச் சுலபமாகச் சுவர்க்கலோகத்தை அடையலாமென்று வேதத்தில் சொல்லி இருப்பத்தை நம்பியாகம் செய்கிறார்கள். வேதங்கள் எவனால்

இயற்றப்பட்டது. அதை விசாரித்தால் அதில் நம்பிக்கை வைக்கக்கூடுமா! ஒரு பாகத்தில் கர்மாவை செய்யவேண்டுமென்றும் மற்றொருபாகத்தில் கர்மாவைவிட்டு ஞானத்தைதான் அடையவேண்டுமென்றும், ஒரு இடத்தில் எல்லாப் பிராணிகளிலும் பிரகாசிக்கும் ஆத்மா ஒன்று, அவைகளை தன் தேகமாகப் பாவிக்கவேண்டுமென்றும், மற்றொரு இடத்தில் ஆடு, குதிரை, யானை, நரன முதலியவைகளை ஹிம்ஸித்து யாகம் செய்யவேண்டுமென்று விதித்தும் இருக்கிறதே. இவ்விதமாக முன்பின் விரோதமான சங்கதிகளைச் சொல்லும வேதஙகளில் எவன நமபிக்கை வைப்பான்? வேதததை ஆதாரமாகக்கொண்ட சாஸ்திரங்களும், வித்தைகளும, தந்திரங்களும பலமார்க்கஙகளை உபதேசிக்கின்றன. ஒரு மார்க்கம மற்றொரு மார்க்கத்திற்கு விரோதமாக இருக்கிறது. அநேகரிஷிகள் எழுதிவைத்திருக்கும் கிரநதஙகளை எலலாம் சேர்தது வியாஸரலலவோ வேதம் எனறு பெயர்கொடுததார். அபபடிககிருக்க ஈசுவரன மூச்சுக்காததிலிருநதும உண்டாயிறறெனறு சொலலுகிறார்கள். அதையும நமபினுலும மூசசுக்காததிலிருந்து உண்டாகும சபதததறகு எனன கௌரவம ஏறபடும. சபததததை உச்சாரணம செய்தால பலன கொடுக்குமெனறு வாசிக்கிறார்கள். எல்லா பூதஙகளிலும தயையிருக்கவேண்டுமெனறு உபதேசித்து ஞானத்தை உண்டாக்குவதுதான் உயர்நத சாஸதிரம். ஜீவஹிமஸை செய்யவேண்டுமெனறு விதிக்குமவேதம ஞானத்தைக் கொடுக்கும என்று சொலவதை அறிவுளளவர்கள கவனிபபார்களா? யாகததைச் செய்யவேணடும், தேகத்தை தபசினல் வருத்தபடுத்திக் கொள்ளவேண்டும, இறந்தவர்களுக்கு சிராத்தம செய்யவேண்டும எனறு உபதேசம செயயும சாஸ்திரஙகளை நமபவேகூடாது. சண்டாளர்களாயிருந்தாலும் பிராணிஹிம

ஸை செய்யாதவர்கள் பிராமணர்கள். தயையில்லாத பிராமணன், பிராணிஹிம்ஸை செய்யும் பிராமணன் சண்டாளனுகமாட்டானு? இப்படிக்கிருக்க 4 வர்ணங்கள் ஏற்பட்டிருக்கிறதென்றும் அவர்களில் பிராமணர்கள் சிரேஷ்டர்கள் என்றும் அவர்கள் தான் வேதத்தைப் படிக்கவேண்டுமென்றும் மற்றவர்களுக்கு அதிகாரமில்லையென்றும் ஜனங்கள் வீணுக வஞ்சிக்கப்படுகிருர்கள். வேதத்திலேயே ஒரு புருஷனுடைய முகத்திலிருந்து பிராமணர்களும், பாஹுக்களிலிருந்து க்ஷத்திரியர்களும், ஊருக்களிலிருந்து வைசியர்களும், கால்களிலிருந்து சூத்திரர்களும் உண்டானதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஒரு தாயாரிடம் பிறந்த பிள்ளைகள் நாலுபேர்களிலாவது அல்லது ஒரு தகப்பனுக்குப் பிறந்த 4 பிள்ளைகளிலாவது ஜாதிபேதம் ஏற்படுமோ? இதைக்காட்டிலும் வேறு எவ்விதமாக ஜனங்களை வஞ்சிக்கலாம். 4 வர்ணத்தார்களுக்கும் ஸ்தூலதேஹம் ஒன்றல்லவா? அவைகளில எவன் பெரியவன் எவன் எளியவன. ஜலத்தில் அடிக்கடி குமிழிகள் உண்டாகி க்ஷணத்தில் நசித்துவிடுகிறதில்லையா? பிருத்வி அம்சம் ரஜஸ் ஜலத்துடன் சேர்ந்து அக்நி ஸம்பந்தப்பட்டு ஆகாசத்தால் மூடப்பட்டுக் குமிழியாகி க்ஷணத்தில் நசிக்கிறது. அவ்விதம் பஞ்சபூதங்களும் சேர்ந்து தேகமாகி அவைகள் நசிக்கவே தேகம் நசித்துவிடுகிறது. இவ்விதமான தேகத்தில் என்ன பேதம் ஏற்படலாம். வேதத்தைக் கவனித்துப் பார்த்தால அனृतव्याघातपुनरुक्तिदोषं ஏற்படும். ஞானகாண்டத்திற்கும் கர்மகாண்டத்திற்கும் என்ன சம்பந்தம். பரஸ்பரவிரோதத்துடன் கூடியதல்லவா ?

न स्वर्गो नापवर्गो वा नैवात्मापारलौकिकः ।

नैव वर्णाश्रमादीनां क्रियाश्च फलदायकाः ॥

தவிரவும் தர்க்க சாஸ்திரத்தைக் கவனித்துப்பார்த்தால் வேதம் நிலைநிற்குமா ?

8. தேஹேந்திரியங்களைக் காட்டிலும் சூன்யமாக ஒரு ஆத்மா இருக்கிறதென்றும் ஸ்தூலதேகம் நசித்த பிறகும் ஜீவன் ஒன்று இருக்கிறதென்றும், அது பரலோகம் சொல்லுகிறதென்றும் அவன் கர்மாவை அனுசரித்து பரலோகங்களுள் சுவர்க்க நரகங்களில் சுகதுக்கம் முறையே அனுபவிக்கிறது என்றும் ஸ்தூலதேஹம் மரித்த திதிகளில் அவரை உத்தேசித்து சிரார்த்த தர்ப்பணம் செய்து திருப்தி செய்விக்கவேண்டும் என்றும் அவ்விதம் செய்வதால் அவர்கள் திருப்தி அடைந்து சிரார்த்தாதி கர்த்தாக்களுக்கு வேண்டிய பலத்தை கொடுக்கிறார்கள் என்றும் இன்னும் அநேக பொய்யான சங்கதிகளைச் சொல்லி ஏமாத்தி விடுகிறார்கள்.

சிரார்த்தம்.

மாதா பிதாக்கள் காரணமாகவும், காரியரூபமான ஸ்தூலசரீரம் லயமடைய அதில் வசிக்கும் ஜீவன் மறுபடியும் ஜனிக்கமாட்டான். பஸ்மமாகிவிட்ட தேஹம் எவ்விதம் உண்டாகும். சமுத்திரத்தில் சேர்ந்த நதி ஜலம் மறுபடியும் திரும்பி நதியாகவருமா? ஆகையால் மரணம் தான் முக்தி. சுவர்க்கம், நரகம் பரலோகத்திலிருக்கிறதென்றும், இறந்தவர்களுக்குச் சுகதுக்கானுபவம் உண்டென்றும், புண்யபாபம் அனுபவித்துக் குறைந்தால் மர்த்திய லோகம் அடைவார்களென்றும், சொல்லப்படுகிறதே. சுவர்க்கலோகம் எங்கே இருக்கிறது? சுகமனுபவிப்பவன் சுவர்க்கத்திலும் துக்கமனுபவிப்பவன் நரகத்திலும் இருக்கிறான். இதைப் பிரத்யக்ஷமாகப் பார்க்கக்கூடாததாக இருக்க வேறுவிதமாகச் சொல்வது அறியாத்தன்மை. பூதகாரியங்கள் பூதங்களில் சேர்ந்து நஷ்டமடைவதால் பரலோகம் போவது எப்படி? ஜீவன் பரலோகம் போகிறதெப்படி? ஜீவன் பரலோகம் போகிறதில்லை. அதற்கு ஸ்வரூப

மே இல்லை. ஸ்வரூபமற்றதற்கு எப்படி கமனம் ஏற்படும்? கடாகாசத்திற்குக் கமனம் உண்டா? ஒரு விருக்ஷத்திலிருந்து மற்றொரு விருக்ஷத்திற்குத் தாண்டுகிற பக்ஷிகள் போல் கமனம் உண்டு என்று சொல்வோமானால் ஜீவனுக்கு ஸ்வரூபமில்லாததால் கமனம் ஏற்படமாட்டாதே? குண வசத்தால் ஜீவன் மறுபடியும் ஜனிக்கிறான் என்று தூர்வாதம் பேசுகிறார்கள். திரவியம் சம்பாதித்து நெய்பால் வாங்கி செம்மையாகச் சாப்பிட்டுத் தேகத்தைப் புஷ்டிசெய்து கொள்வது அவசியம். ருணம் வாங்கியாவது தேகத்தைப் புஷ்டி செய்துகொள்ளவேண்டும். ஸ்தூலதேகம் நசிக்க ருணம் தீர்ந்துவிடும். சுகமாக இருப்பதுதான் மோக்ஷம். இப்படிக்கிருக்க முன்ஜன்மத்தில் செய்த கர்மவாஸனையால் ஜனிக்கிறான் என்பது சரியல்ல. ஸ்தூலசரீரத்திலிருந்து வேறு சரீரம் செல்வது சாத்தியம் என்றால் தினந்தோறும் ஸ்வப்னவஸ்தையில் கங்கை முதலிய நதிகளில் ஸ்நானம் செய்ததாகவும் மலைகளைப் பார்த்ததாகவும் ஸ்வப்னம் காண்கிறான். காரண சரீரத்திலும் ஜீவன் வெளியில்போகிறான். போனஜீவன் வராததால் ஸ்வப்னத்திற்குப் பின் மரணம். ஸ்தூலதேகத்திலிருந்து ஸ்வப்ன காரண சரீரங்களில் ஸஞ்சாரம் செய்யலாம். ஆகையால் ஒருவனை உத்தேசித்து மரணத்திற்குப் பிறகு சிரார்த்தம் செய்யவேண்டியதென்று விதித்திருப்பது பரிஹஸிக்கக்கூடியதல்லவா? இறந்தவர்களை உத்தேசித்து சிரார்த்தம் செய்வது அவர்களுக்குத் திருப்தி உண்டாக்குமானால் தூரதேசம் செல்கிறவனுக்கு சாதமூட்டை கட்டிக்கொடுப்பது வியர்த்தம். அவனை உத்தேசித்து நாம் தினந்தோறும் சாப்பிடலாம். வேறு லோகத்திலிருக்கும் பிதிருக்கள் தானத்தால் திருப்தி அடைவார்களானால் உப்பரிகையில் இருப்பவனை உத்தேசித்து கீழான இடத்தில் தானமும் கொடுத்துவிட

லாம். சிரார்த்தம் என்கிற கிரியை ஏன் செய்யவேண்டும்? இறந்தவன் எங்கே இருக்கிறான்? அவன் எப்படி சாப்பிடுவன்? அவர்கள் புஜித்ததைப் பார்த்தவன் எவன்? சிரார்த்தம் செய்வதால் என்ன பிரயோஜனம்? மிர்ஷ்டான்னம் பிராமணர்கள் சாப்பிட்டுத் திருப்தி அடைந்தோம் என்று சொல்லிப் போய்விடுகிறார்கள். இவர்கள் திருப்தி அடைவதால் கர்த்தாவிற்கு என்ன பிரயோஜனம்? பிதிருக்கள் என்று சொல்லப்படுபவர்கள் எவர்? பிதாமுதலியவர்கள் புண்ணியகர்ம, பாபகர்மாக்களைச் செய்து அதற்கனுகுணமான் ரூபங்களை எடுத்துக்கொள்கிறார்கள். உண்பது வாஸ்தவமானால் புண்ணிகர்மத்தால் சுவர்க்கம் முதலிய இடங்களில் வசிப்பவர்களும், பாபகர்மத்தால் திர்யக் பசு, விருக்ஷம் முதலிய ரூபம் அடைந்தவர்களும் நரகத்தில் துக்கப்படுகிறவர்களும் எவ்விதம் சிரார்த்தம் செய்வதால் திருப்தி அடைவார்கள்? நாம் கொடுக்கும் பிண்டம் அவர்களை எப்படிச் சேரும்? விருக்ஷாதிகளுக்குப் பிண்டத்தால் என்ன திருப்தி ஏற்படும்? தம்முடைய கர்மபலங்களை அனுபவிப்பவர்கள் நரகாதிகளை அடைவதால் தூரத்தில் கொடுக்கப்படும் ஹவியகவியங்களைப் புஜிக்கச் சாமர்த்தியமற்றவர்களுக்கு புத்திரர்கள் கொடுக்கும் அன்னத்தால் என்ன திருப்தி ஏற்படும். திருப்தி உண்டானாலும் தங்களை ரக்ஷித்துக்கொள்ளச் சக்தி அற்றவர்கள் எவ்விதம் கர்த்தாக்களுக்கு ஸ்வர்க்காதி பலத்தைக் கொடுக்க சாமர்த்தியமுள்ளவர்களாகிறார்கள்? அநேக ஜனங்கள் சிரார்த்தம்செய்ய சிரார்த்தத்தின் பிரயோஜனம் எவனை உத்தேசித்து செய்யப்படுகிறதோ அவனையே எவ்விதம் சிராத்தபிரயோஜனமடையும்? சிரார்த்தகாலம் அவர்களுக்கு தெரிந்து அதின் பலனை எவ்விதம் அனுபவிக்கிறார்கள்? வார்சு இல்லாமல் இறப்பவர்களுக்கு எவ்விதம் திருப்தி ஏற்படும்? இவை

கள் எல்லாம் தனத்தை விரயம் செய்ய ஏற்பட்ட மார்க்கங்கள். அவைகளில் பிரவிருத்தி ஏற்படக்கூடாது.

9. தேஹத்தை கிலேசப்படுத்தவும் தனவிரயம் செய்யவும் அஞ்ஞர்கள் வேறு மார்க்கங்கள் கல்பித்திருக்கிறார்கள். தீர்த்தயாத்திரை செய்யவேண்டுமென்றும் தீர்த்தங்களில் சிரார்த்தாதிகள் தானங்கள் செய்யவேண்டுமென்றும் சொல்லுகிறார்கள். கங்காதிநதிகள் தீர்த்தமாக என்ன காரணத்தினால் சொல்லப்படுகிறது? கங்காதி நதிகளைக் கவனித்துப் பார்த்தால் தீர்த்தத்தின் பெருமையை அறியலாம். ஆகாசத்திலிருந்து மேகங்கள் வர்ஷிக்கும் மழை பர்வதங்களில் விழுந்து அசுத்தமான இடங்களிலுள்ள வஸ்துக்களைச் சேர்த்து நதி என்று பெயரடைந்து சமுத்திரம்போய்ச் சேருகிறது. பாபத்தை பிரவாஹமாக உடைய நதி எவ்விதம் அதிபரிசுத்தமாகும். பூமியை ரக்ஷிக்கும் மலைகள் கல்களின் கூட்டம். அவைகளுக்கு என்ன பெருமை? நதி ஜலங்களில் ஸ்நாநம் செய்வது புண்யத்தை உண்டாக்குமென்றால் ஜலத்தில் எப்பொழுதும் வசிக்கும் மத்ஸ்யங்கள் என்ன புண்ணியசாலிகள் என்று சொல்லவேண்டும்? சிரமப்பட்டு சம்பாதித்த தனத்தை வீணாக தானம் என்கிற வியாஜத்தினால் மற்றவர்களுக்குப் பிரயோஜனமின்னியில் கொடுக்கவேண்டும். இவைகளையாவது ஒத்துக்கொள்ளலாம். பண்டிதர்கள் என்கிற அஹங்காரம் மேலிட்டவர்கள் விவாக விஷயமாக அநேக குதர்வாதம் சொல்லுகிறார்கள். உலகத்திலுள்ள எல்லா வஸ்துக்களும் அனுபவிப்பதற்குத் தான் ஏற்பட்டவைகள். ஒரு அரசனுக்குக் குதிரை லாயத்தில் அநேகம் குதிரைகள் இருக்க சவாரி செய்யவேண்டுமானால் மனதிற்கு இசைந்த குதிரையைச் சவாரி செய்கிறதில்லையா? நரன் என்றும் நாரி என்றும் பேதமே ஏற்பட்டிருக்கையில் எந்த நரனுக்கு எந்த

நாரியில் இச்சை எற்படுகிறதோ அவளை விவாகம் செய்து கொள்ளக்கூடாதா? விவாகம் என்கிற நிர்ப்பந்தம் ஏன் எற்ப்டுத்தவேண்டும்? பிரமத்தின் ரூபம் ஆனந்தமென்று வேதம் சொல்லவில்லையா? அந்த ஆனந்தத்தில் பேதமில்லை. தேகத்தில் வியாதி ஏற்படாவரையிலும் ஆனந்தத்தை அனுபவிப்பதுதான் அவசியமான தர்மம். தேகம் தளர்ந்தபிறகு என்ன சுகமடையலாம்? தானத்தில் முக்கியமான தானம் தன் தேகத்தை யாசிப்பவர்களுக்கு அர்ப்பணம் செய்வதல்லவா? தேகம் நசித்தபிறகு வாயஸாதிகளுக்கு ஆகாரமாகிறதென்று சுருதிகள் சொல்லுகிறதே? ஏன் தேகமுள்ளவரையில் ஆநந்தத்தை இஷ்டமானபடி அனுபவிக்கக் கூடாது? விவாக விஷயத்தில் ஏன் நிர்ப்பந்தம் ஏற்படுத்தியிருக்கிறார்கள்? பிர்மா ஆதிசிருஷ்டியில் தக்ஷன் மரீசி என்கிற 2 பிள்ளைகளைச் சிருஷ்டித்தார். மரீசியின் பிள்ளையான காசியபர் தக்ஷன் கன்னிகைகளில் 13 பேர்களைத் தர்மமாக விவாஹம் செய்துகொண்டார் என்று புராணங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படியிருக்க இப்பொழுது புதிதாகப் படித்தவர்கள் கம்யா கம்ய ஸ்திரீ விசாரணை செய்கிறார்கள். கோத்திரம் சூத்திரம் பார்க்கவேண்டும் என்றும் ஸ்திரீகளில் சிலர் வர்ஜிக்கவேண்டியவர்கள் என்றும் ஏன் சொல்ல வேண்டும். பதிவிரதா தர்மம் என்றும் ஜிதேந்திரியனாக இருக்கவேண்டும் என்றும் சொல்லி வீண்காலம் கழிக்கிறார்கள். அவர் மனதிற்குத் தக்கபடி சுகமடைய மார்க்கம் தேடுவதுதான் ஜீவிப்பதின் பலன்.

10. மேற்கூறியபடி அநேக துர்வாதங்கள் ஏற்பட்டிருக்கிறது. அவைகளைக் கவனித்துப் பார்க்காத வரையில் சாஸ்திரத்திற்கும் யுக்திக்கும் ஒற்றிருப்பதாகவே தோன்றும். செம்மையாக விசாரித்துப் பார்த்தால்

அவைகளின் தோஷம் தெரியவரும். இவ்வித வாதங்களைக் கேட்டு அநேக ஜனங்கள் மார்க்கம் தவறி விடுகிறார்கள். அவர்கள் அவ்விதம் வழி தவறாமலிருக்க வேண்டுமென்கிற ஒரு எண்ணங்கொண்டு நான் அவைகளை எடுத்துச் சொல்ல அவைகள் சாஸ்திரத்திற்கும் யுக்திக்கும் தத்துவத்திற்கும் ஒற்றவைகளல்லவென்றும் விபரீதமாக கிரஹித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும் அவைகளின் தத்வம் சாஸ்திர ஆராய்ச்சி உள்ளவர்களைக்கொண்டு அறிந்து கொள்ளவேண்டுமென்றும் எடுத்துக்காட்டி கிரந்தங்களிலிருந்து நான் அறிந்துகொண்ட வரையில் மேற்கண்ட ஆக்ஷேபணைகளுக்கு இதின் இரண்டாவது மூன்றாவது பாகங்களில் சமாதானமும் எழுதி இருக்கிறேன். "தர்மத்தைப்பற்றிய விஷயங்களில் சந்தேகம் ஏற்பட்டால் அதின் பலாபலத்தை விசாரிக்காமல் அநேக விஷயங்களறிந்த பண்டிதர்களும் நிச்சயமாகப் பதில் சொல்லக்கூடாது. தர்மத்தை அறியவேண்டியதற்கு அநேக மார்க்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. எல்லாராலும் முழுவதும் அறிய முடியாது. ஆகையால் தர்மங்களின் அர்த்தத்தை நிச்சயமாகச் சொல்லக்கூடாது" என்று மத்ஸ்யபுராணத்தில் சொல்லியதை அனுசரித்து நான் மேற்கூறிய ஆக்ஷேபணைகளுக்கு நிச்சயமாகச் சமாதானம் சொல்லவில்லை.

तस्मान्नवाच्यो ह्येकेन बहुज्ञेनापि संशयः ।
बहुद्वारस्य धर्मस्य सूक्ष्मादुरनुगा गतिः ॥
तस्मान्न निश्चयाद्वक्तुं धर्मः शक्यो हि केनचित् ॥

(मत्स्य० पु० १४५ अध्यायं)

யாக்த்தின் ரஹஸ்யார்த்தங்களைக் கவனியாமல் வஸு என்கிற மஹாராஜன் நிச்சயமாகப் பதில் சொல்லி சாபத்திற்குள்ளானதை நான் அறிந்திருக்கிறேன். என் சிற்ற

றிவுக்கு எட்டினவரையில் நான் அறிந்து கொண்டவைகளை சுருக்கமாக எழுதுகிறேன்.

(இன்னும் வரும்.)

பி. வி. கிருஷ்ணசாமி அய்யர்.

பக்தி.

(முன்தொடர்ச்சி.)

தேவயானையும் தனது பெருமையை வெளியிடுவதற்காக அசுர ராஜனான விருஷபர்வாவின் புத்திரியான சர்மிஷ்டையென்பவளை தன் தந்தை யுத்திரவின் வாயிலாகத் தோழியாக வரப்பெற்று மனமுவந்தவளானாள். இவ்வாறிருக்க வோர்நாள் வசந்த காலத்தில் அரசன் சர்மிஷ்டையை நோக்க “கண்ணொடு கண்ணோக் கொக்கின் வாய்ச் சொற்கள் என்ன பயனுமில” வென்ற பொய்யில் புலவர் புகன்ற பழமொழிப்படி காதற்கொண்டு காந்தர்வவிதி வாயிலாகக் கலவிகொண்டு களிப்புற்றிருந்தனர். சின்னாளில் பூருவுதித்தபடியாம் றேவயானைக்குத் தெரிந்தும் அவளது கண்டனையையும் கடந்தபடியால் பத்னி மிகவும் கோபங்கொண்டு தந்தையை வருவித்தன்னவரிடம் தெரிவிக்க, அவருஞ் சற்றுமாலோசியாது, சாபத்தினால் விருத்தனாக்கினர். பிறகு தேவாயானையும் பச்சாத்தாபங்கொண்டு, தானே தந்தையை வேண்ட அதற்கவர் சொல்லொருக்காலும் மாறாதாகலின், கூடுமாயின் பெற்றுக்கொள்பவரிருந்தாலிதனை மாற்றிக் கொள்ளலா

மெனக் கூறிப்போயினர். பிறகாசன் அரசியற்குரிய குழந்தையான யதுவை யழைத்தனது யௌவனத்தையெனக்குத் தந்து, எனது வார்த்தையை பெற்றுக் கொள்ளென்று கூற, இவளைப் பரிஹாஸஞ் செய்து சென்றான். பிறகு யயாதி ராஜன், சர்மிஷ்டையின் குமாரனை, பூருவிடமும் மற்றுமுள்ள யதுமுதலியோரிட்மும் எவன் எற்கு யௌனமுதவுகின்றானே, அவனே சக்ரவர்த்தியாகுவனென்னும் வார்த்தைக்கு யது மனமிசைய வில்லை. பூருவோவுடனே மனமகிழ்ச்சியோடு தனதழகிய யௌவனத்தை பிதாவுக்களித்து அவரது மூப்பையுந் தான் பெற்று பிதிர் பக்தசிகாமணியெனும் பெற்றியை பெற்று வாழ்ந்து வந்தான். பிறகு யயாதி மன்னவன் மனத்தே யிக் காமத்தினை வெறுத்து ஒரு சிறு குழந்தைக் குத்தோன்றியவளவு நமது மூளைக்குப் புலப்படவில்லையே யென்றாலோசித்து தன் குமாரனையழைத்து யௌவனத்தை யவனிடமேகொடுத்து எப்பொழுதும்போல் மூப்பைத் தான் பெற்றுக்கொண்டு பூருவையே சக்ரவர்த்தியாகச் செய்தனன். என்றவிவ்வுபாக்யானத்தானும் தன் பிதாவின் உத்திரவிற்காகவே தாயையும் கெவனியாது வெட்டிய பரசுராமன் சரித்திரத்தாலும் மற்றுமுள்ள நூலுணர்வாலும் பிதிர் பக்தியும் "ஏவாமக்கண் மூவாமருந்து" என்பதும் ஒருபோதும் விளங்காமற்போகாது.

गुरुभक्तिः— गुरुभक्तिं सदा कुर्याच्छ्रेयसे भूयसे नरः ।
गुरुरेव शिवस्तस्मान्नान्य इत्यब्रवीच्छ्रुतिः ॥
यस्य देवे परा भक्तिर्यथा देवे तथा गुरौ ।
तस्यैते कथिता ह्यर्थाः प्रकाशन्ते महात्मनः ॥

T. N. இராமச்சந்திர சாஸ்திரி.

இன்னும்வரும்.)